**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.218/2024 - PW-10**

| | |
|---|---|
| Name | திரு.பழனி |
| Husband/Father Name | குட்டி |
| Village /Area | பழையபாளையம் |
| Taluk | சோளிங்கர் |
| Occupation | விவசாயம் |
| Age | 40 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 09.03.2026.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இறந்த சண்முகம் எனது மாமா ஆவார். அ.த.சா.1 லட்சுமி எனது அக்கா உறவு முறை ஆவார். 08.05.2024 அன்று காலை கோவிந்தாங்கல் ஜங்கஷனிடம் டீ கடையில் டீ சாப்பிடவதற்காக எனது மாமா சண்முகம் சென்றிருந்தார். அப்போது என் மாமா சண்முகத்துக்கு வடிவேல் என்பவர் கொடுக்க வேண்டிய ரூ.2000/- பணத்தை கேட்ட போது ஒருவருக்கு ஒருவர் வாய் தகராறு ஏற்பட்டு வடிவேல் என்பவர் அங்கிருந்த விறகு கட்டையை எடுத்து என் மாமா சண்முகத்தின் தலையில் அடித்ததாக கேள்வி பட்டேன். காயமுற்ற என் மாமா சண்முகத்தை எனது உறவினர்கள் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு சிகிச்சை பெற்ற எனது மாமா சண்முகம் 12.05.2024 அன்று இறந்துவிட்டதாக கூறினார்கள். நானும் எனது உறவினர்களும் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு சென்று இறந்த எனது மாமா சண்முகத்தின் பிரேதத்தை பார்த்தோம். இது சம்மந்தமாக பானாவரம் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இறந்த சண்முகத்தின் ஒரே மகளுக்கு இரண்டு கண்களும் தெரியாது. அவர் சண்முகத்தினுடைய பாதுகாப்பில் தான் வளர்ந்து வந்தார். தற்போது அவருக்கு யாருமில்லை. ஆதலால் அவருக்கு நிதி உதவி வேண்டும்

என்று சாட்சி கூறினார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் ஆகியும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.03.09 19:20:10 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.